IN THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (D.W.2 )**

Solemnly affirmed and sworn by Tr.Saravanan, Gr.III Bench Clerk on 4.12.2019 in accordance with the provisions of Act X of 3331.

அசல் வழக்கு எண். 158/2015

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மூர்த்தி | தாலுகா | |
| தகப்பனார் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

பி.வா.சா.1 மூர்த்தி 4.12.2019 இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி முதல் விசாரணை

நான் கள்ளிக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக தற்போது பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வரப்பட்ட சம்மனை தொடர்ந்த ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன். புலஎண்.399க்கான நத்தம் நிலவரித்திட்ட துாய அடங்கல் பதிவேடு சா.சா.1. புலஎண்.399க்கான நத்தம் நிலவரி திட்ட துாய சிட்டா சா.சா.2. அழைப்பாணையில் கோரப்பட்ட கிராம நிர்வாக அலுவலர், திருமங்கலம் வட்டாட்சியர் மற்றும் உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரின் பரிந்துரை ஆகிய கோப்புகள் மதுரை மாவட்ட வருவாய் அதிகாரி அலுவலகத்தின் கோரப்பட்டதன் அடிப்படையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

<u>குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்து கள்ளிக்குடி கிராம பிட் 1 புல எண். 399/3ல் கட்டுப்பட்டுள்ளது என்றால் சரி. புலஎண்.399/3 விஸ்திரனம் 40 செண்டு. புலஎண். 399/3 கிராம நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கள்ளிக்குடி கிராம

பிட் 1 புல எண். 399/3ல் நத்தம் தூய அடங்கலில் ரங்கன் மனைவி கஸ்தூரி, சுந்தராசு அய்யங்கார் மகன் நரசிம்மன், நாராயணத்தேவர் பெயரில் பதிவாகி வருகிறது. 40 வருடங்களுக்கு மேலாக மேற்படி நபர்களின் பெயரில் பட்டா பதிவாகி உள்ளது என்றால் சரியல்ல. சா.சா.1 ஆவணத்தில் தற்போது வரை கஸ்தூரி, நரசிம்மன், நாராயணத்தேவர் பெயரில் உள்ளது. நாராயணத்தேவர் என்பவர் கிருஷ்ணணின் தந்தை என்றால் சரிதான். கிருஷ்ணணின் வாரிசுகள் அழகர், வாணி என்றால் சரிதான். கிராம நத்தத்தை பொறுத்து யாருக்கும் உரிமை இல்லை என்றால் சரிதான். 2003ல் கள்ளிக்குடி கிராம பிட் 1 ல் புல எண். 399/3 பட்டா எண்.1233 மேற்படி 3 நபர்களுடன் சேர்த்து கிருஷ்ணன் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிருஷ்ணன் பெயர் ஆர்.டி.ஆர் உத்தரவின் மூலம் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மாறுதல் நில உடமை பதிவு மேம்பாட்டுத்திட்டத்தில் மாற்றப்படவில்லை என்றால் சரிதான். புலஎண்.399/3 வேறு ஒரு நபரின் பெயருக்கு பதிலாக கிருஷ்ணன் பெயர் மோசடியாக சேர்க்கபட்டுள்ளது. பட்டா எண். 1233 முத்துராஜ் மனைவி அன்புச்செல்வி பெயரில் உள்ளது. கள்ளிக்குடி கிராம பிட் 1 புலஎண். 399/3 க்கும் முத்துராஜ் மனைவி அன்புச்செல்விக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்திரம் 13செண்ட். தாவா சொத்திற்கு வடக்கே பெருமாள் கோவிலுக்கு தெற்கே இடையில் ஒரு வீடு உள்ளது என்றால் தற்போது இல்லை ஒரு வாட்டர் டேங்க் மட்டும் உள்ளது. கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றிய கதவு எண். 10/80ல் தனலெட்சுமி என்பவரின் வீடு உள்ளது என்றும் அவர் அந்த வீட்டில்வசித்து வருகிறார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. தனலெட்சுமி என்பவர் கிருஷ்ணணின் உடன் பிறந்த சகோதரி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புலஎண்.399/3ற்கு மேற்படி கஸ்தூரி, நரசிம்மன், நாராயணத்தேவர் பெயரிலும்

அனுபவத்தின் அடிப்படையில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் சுந்தர் மற்றும் பாஸ்கர் என்பவர்களுக்கு எவ்வித வருவாய் ஆவணமும் இல்லை என்றால் சுந்தர் மற்றும் பாஸ்கரின் தகப்பனார் பெயரான நரசிம்மன் பெயரில் உள்ளது. சுந்தராசு அய்யங்கார் நரசிம்மனுக்கும் சுந்தர் மற்றும் பாஸ்கருக்கும் என்ன உறவு முறை என்றால் ஆவணங்கள் மூலம் சொல்கிறேன். தாவா சொத்தில் கிருஷ்ணன் பெயரை நீக்கம் செய்ய திருமங்கலம் வட்டாட்சியர் உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியருக்கு பரிந்துரை செய்துள்ளார். மேற்படி பரிந்துரையின் அடிப்படையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-3 கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று பற்றி எனக்கு தெரியாது. புலஎண்.399/3ல் யார் யாருக்கு எவ்வளவு விஸ்திரனம் என்று தனியாக இல்லை என்றால் சரிதான் கூட்டுப்பட்டாவாக உள்ளது. தாவா சொத்தில் 12 செண்ட் வாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் நான் பார்த்த போது காலியிடமாக இருந்தது. யாரும் அனுபவத்தில் இல்லை. பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காலியிடமாக உள்ளதால் யார் அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு தெரியவில்லை.

<u>மறுவிசாரணை</u>

பட்டா எண்.1233ல் கிருஷ்ணண் என்பவர் பெயரில் பட்டா வழங்கியுள்ளது தவறு என்றால் சரிதான். பட்டா எண்.1233ல் உள்ள அன்புராஜ் மனைவி முத்துலெட்சுமி பெயரில் உள்ளதை கிருஷ்ணண் பெயரில் பட்டா வழங்கபட்டுள்ளது என்றால் அது தவறு.